## சுதந்திரம் பெற்ற 80 ஆண்டுகளில் ஆலயத்தின் சொத்துக்களை மீட்டெடுத்தது எங்கள் ஆட்சி!

## திராவிட மாடல் ஆட்சியில் அறநிலையத்துறை வரம் விளையும் துறையாக இருந்தது!

# எங்களுக்கு இடைவேளை முடிந்து, தொடர் வேலை தொடரும்! இமயம் வரை எங்கள் அறம் படரும்!

### சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடுக்கடுக்கான சாதனைகளைச் சுட்டிக்காட்டி உரை!

**சென்னை, ஆக. 23-**

**சுதந்திரம் பெற்ற 80 ஆண்டுகளில் ஆலயத்தின் சொத்துக்களை மீட்டெடுத்த எங்கள் ஆட்சி, திராவிட மாடல் ஆட்சியில் அறநிலையத்துறை வரம் விளையும் துறையாக இருந்தது என்றும் எங்களுக்கு இடைவேளை முடிந்து, தொடர் வேலை தொடரும்! இமயம் வரை எங்கள் அறம் படரும் என்றும் சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடுக்கடுக்கான சாதனைகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.**

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாத்தின் போது முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-

சரித்திர புகழ்பெற்ற - சட்டப்பேரவை தலைவர் அவர்களே திண்டுக்கல்லில் பிறந்தாலும்-பூட்டு போடாத திறந்தமனம் கொண்ட தங்கள் மாண்பமைக்கு வணக்கம்!

தான் பகுத்தறிவாளராக இருந்த போதும்- இறை நம்பிக்கை உள்ளவர்களின் - உரிமைக்காக போராடிய போராளி தந்தை பெரியாரை வணங்குகிறேன்.

“மனிதநேயமே அறம், மக்களின் துயர் துடைப்பதே அறப்பணி” என்ற நுண்ணறிவு நூலகம், படிக்க படிக்க தீராத, திராவிட படிப்பகம் பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன்!

அண்ணாவின் இதயத்தை இரவல் வாங்கி, அவரிடமே மீண்டும் அதை கொடுத்து அவர் அருகிலேயே “ஓய்வெடுக்காமல் உழைத்தவர்” “இதோ ஓய்வு கொண்டிருக்கிறார்” என்று வாழும் போதே தன் நினைவிட வாசகத்தை தந்த தீர்க்கதரிசி,

கடற்காற்றை தான் வாங்கி, எங்களுக்கு மூச்சு காற்றாய் வழங்கி வாழ வைக்கும் வரலாற்றுத் தலைவர் முத்தமிழறிஞரை வணங்குகிறேன்.

**திராவிட ஆன்மிக புரட்சி!**

துறைதோறும் வளர்ச்சி, திராவிட ஆன்மீக புரட்சி, எங்கள் தன்மான சுய சக்தி, ஊதியணைக்க முடியாத உயரத்தில் இருக்கும் சூரிய சக்தி,

தடுக்கி விழும் பிள்ளைக்காக, பதறி துடிக்கும் ஒரு தாயைப் போன்ற அன்பு சக்தி, எங்களை இயக்கும் உயிர் சக்தி,

இந்திய வரைபடத்தில் தமிழ்நாடு கீழே இருந்தாலும் மாநிலங்களின் வளர்ச்சி படத்தில் தமிழ்நாட்டை உச்சத்தில் உட்கார வைத்து சட்டமன்றத்தின் சங்கநாதம் எதிர்க்கட்சித் தலைவர்!

“இந்த ஸ்டேட்டின்” “ஸ்டேட்டஸ் ஐ“ உயர வைத்து - சாதனை படைத்த

திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

**சட்டமன்றத்தின் சங்கநாதம் எதிர்க்கட்சித்தலைவர்!**

வம்பால் எதிர்ப்பவரை , அன்பால் வீழ்த்தும் பண்பாளராய்; ராஜராஜ சோழனின் மகன், கடாரம் வென்ற ராஜேந்திர சோழனாய்; தந்தை இரண்டாம் பிலிப்பின், ராணுவத்தைக் கொண்டு உலகை வென்ற அலெக்சாண்டராய்; பொறுப்பு வழங்கும் போதெல்லாம், பொறுத்துக் கொள்ளாதவர்கள் கூட புருவம் உயர்த்தி போற்றும் படி உயர்ந்த, சட்டமன்றத்தின் சங்கநாதம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களை வணங்குகிறேன்.

பேரவை தலைவர் அவர்களே எப்போதெல்லாம் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் அது ஆன்மீகத்திற்கு எதிரானது ஆட்சி என்று அது கலைஞர் ஆட்சி என்றாலும் சரி எங்கள் திராவிட மாடல் ஆட்சி நாயகர் ஆட்சி என்றாலும் சரி.. கட்டமைக்க முயல்வார்கள்.

அந்த கட்டை உடைத்து ஆன்மீக புரட்சி கண்ட இருபெரும் தலைவர்களை மீண்டும் ஒருமுறை நினைவு கூறுகிறேன்.

பேரவை தலைவர் அவர்களே

சமீபத்தில் ஆகஸ்ட் 15ஆம் தேதி கோட்டை கொத்தளத்தில் முதல்வர் அவர்கள் கொடியேற்றி உரை நிகழ்த்தினார். அதை நான் திரும்பிப் பார்க்கிறேன்.. திகைத்து நிற்கிறேன்.

2021 ஆகஸ்ட் 15 அன்று இதே கோட்டை கொத்தளத்தில் எங்கள் திராவிட மாடலநாயகன் கொடி யேற்றினார் . அவ்விழாவில் 100 நாட்களில் சாதனைகளை பறை சாற்றினார் அதில் ஒரு சாதனை தந்தை பெரியார் நெஞ்சில் வைத்த ஒரு முள் கலைஞர் 18 ஆண்டுகள் சட்ட போராட்டம் நடத்தி பெற்ற சட்டம் தீர்ப்பு அந்த தீர்ப்பின் அடிப்படையில் 32 அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கினோம் என்று அந்த சுதந்திர தின கொடியேற்றம் விழாவிலே பெருமகத்தோடு பறைசாற்றினார்ர்ச்சக ராசி அன்னை தமிழுக்கு அர்ச்சனை என்று பறைசாற்றினார். அதையும் நான் திரும்பிப் பார்க்கிறேன்.

**300 ஆண்டு பழமையானதை ஆவணப்படுத்தியுள்ளோம்!**

இன்றைக்கு நம்முடைய முதல்வர் கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றம் போது துறையினுடைய அனைத்து ஆவணங்களையும் ஆவணப்படுத்தி டிஜிட்டலைஸ் பண்ணுகிறோம் என்று அறிவிப்பு செய்தார். இதை ஏற்கனவே தமிழ் நிலம் படுகையை உருவாக்கி மூன்றரை லட்சம் ஏக்கர் நிலங்களை ஏற்கனவே ஆவணப்படுத்தி துறையினுடைய நான்கு கோடி பக்கங்களை நூறாண்டுகள் 200 ஆண்டுகள், முன்னூறு ஆண்டுகள் ஆகிய பக்கங்களை ஆவணப்படுத்தி பாதுகாத்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பதை இங்கே நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்

பேரவை தலைவர் அவர்களே

அண்மையில் 16 ஆம் தேதி நீதியரசர் ஜெயச்சந்திரன் அவருடைய பெஞ்சிலே ஒரு அருமையான தீர்ப்பு வந்தது.

இதே மாமன்றத்தில் 2021 ஆம் ஆண்டு ஆட்சி கட்டிலில் ஏறியவுடன் முதல்வர் அவருடைய சீரிய சிந்தனையில் உதித்த திட்டம் தான் அறம் காக்கும் துறையில் 10 கல்லூரிகள் தொடங்க முடிவெடுத்தோம். அந்த 10 கல்லூரிகளில் நான்கு கல்லூரிகளை வாடகை கட்டிடத்தில் துவக்கினோம்.

கல்லூரி தொடங்குவதே தவறு என்று நீதிமன்றத்திற்கு சென்றார்கள் சிங்கிள் பெஞ்ச் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது, இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வில் தள்ளுபடி செய்யப்பட்டது, உச்ச நீதிமன்றத்திற்கு சென்றார்கள் அங்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

தள்ளுபடி தள்ளுபடி தள்ளுபடிக்கு பின்னால் மீண்டும் அது முறையாக கடைபிடிக்கவில்லை என்று மீண்டும் சிங்கிள் பெஞ்சுக்கு சென்றார்கள். அதன் முது ஜெயச்சந்திரன் நீதியரசர் அவருடைய தீர்ப்பு 16 ம் தேதி அண்மையில் கிடைக்கப்பெற்றது. அத் தீர்ப்பில் உறுதியாக சொன்னார் இந்த கல்லூரிகள் தொடங்கியது நியாயமானது முறையானது என்று அது அன்றைய தமிழக முதல்வருடைய கருத்துக்கு வலு சேர்த்து இருக்கிறது இன்றைக்கு நீதிமன்றம்.

**அறிவித்த ஆறு கல்லூரிகள் கட்டப்படுமா?**

நான் இங்கு கேட்க விரும்புவதெல்லாம் 10 கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன திருச்செந்தூர் கோவில் சார்பிலும் அர்த்த நாரீஸ்வரர் கோயில் சார்பிலும் கட்ட வேண்டிய கல்லூரி கட்டடங்கள் கட்டப்படுமா ?அப்போது அப்போது அறிவித்த ஆறு கல்லூரிகள் கடையம், லால்குடி, வேலூர் மாவட்டங்களில் கட்டப்படும் என்று அறிவித்த அந்த ஆறு கல்லூரிகளும் இந்த ஆட்சியிலே கட்டப்படுமா? மேலும் அந்த தீர்ப்பிலே நீதி அரசர் ஒன்றை குறிப்பிட்டிருக்கின்றார் திருக்கோயில் சார்பில் நிதி இருந்தால் கல்லூரிகள் கட்டலாம் இல்லை என்கின்ற போது பிரத்யோகமாக அரசு அதற்கு உதவி செய்ய முன் வர வேண்டும் என்று வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு அது எங்கள் முதல்வரின் 10 கல்லூரிகளா கனவை நிறைவேற்றுங்கள் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்

**தங்க முதலீட்டு திட்டம்!**

திருக்கோயிலின் ஆன்மீக வளர்ச்சிக்கு எப்படி எல்லாம் வருமானத்தை ஈட்டினோம் என்று கடந்த கால காலங்களிலே என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் கேட்பாரற்று மூட்டை மூட்டையாக கட்டி வைக்கப்பட்டிருந்த தங்கங்கள் யாரும் கேட்பாரற்று கிடந்தது அந்த தங்கங்களை மூன்று நீதியரசர் கொண்ட குழு அமைத்து மூன்று மண்டலங்களாக பிரித்து அந்த தங்கத்தினுடைய பலமாற்று பொன்னினங்கள் எந்தெந்த தெய்வத்திற்கு காணிக்கையாக வந்ததோ அந்த தெய்வத்திற்கு பயன்படுத்த முடியாத தங்கங்களை நீதி அரசர்களை வைத்து முழுமையாக அதை வீடியோ பதிவு செய்து அந்த தங்கத்தை பிரித்து அந்த தங்கத்தை இங்குள்ள பாரத ஸ்டேட் பாங்கியின் சார்பாக ஒன்றிய அரசுக்கு சொந்தமான மும்பையில் இருக்கின்ற

தங்க உருக்காலைக்கு அனுப்பப்பட்டு கொண்டு போகின்ற தங்கத்தின் அளவு எவ்வளவு? உருக்கிய பிறகு தங்கத்தின் அளவு எவ்வளவு?என்ற சான்றிதழோடு இதுவரை திருக்கோயிலுக்கு சேர்த்த தங்கத்தின் அளவு 1111கிலோ.

அந்த தங்கத்தினால் வருகிற ஆண்டு வருவாய் ரூபாய் இருபது கோடி. இப்படி ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போது இறைவனுக்கு சொத்து சேர்த்து அந்த சொத்தின் வாயிலாக இறைவனுக்கு திருப்பணி செய்த ஒரு அரசு உண்டு என்றால் அதுதான் திராவிட முன்னேற்ற கழகத்தின் திராவிட ஆன்மீக மாடல் அரசு தான் .

பேரவை தலைவர் அவர்களே

இந்த சபையில் பல நேரங்களில் காணோம் காணோம் என்ற வார்த்தையை கேள்விப்பட்டோம்.

**நான் சொல்லிக் கொள்வேன்**
**சூரியனை வானத்தில் காணலாம்!**

சந்திரனை நட்சத்திரங்கள் நடுவில் காணலாம் பிரகலாதன் சொன்னான் ஆண்டவனை எங்கே காண்பி என்றால் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பார்.

அந்த வகையிலே திராவிட மாடல் ஆட்சியிலே



ஆன்மீக மக்களுக்காக உருவாக்கப்பட்ட நன்மைகள் உரு பசி ஓவா பிணி போக்குகின்ற அன்ன தான திட்டமாக இருந்தாலும் சரி, கட்டணமில்லாத இலவச திருமணமாக இருந்தாலும் சரி, அது விளக்கு பூஜை என்றாலும் சரி, மருத்துவமனைகள் என்றாலும் சரி, எங்கெல்லாம் லட்சுக்கான லட்சக்கணக்கான மக்கள் பயன்பட்டார்களோ அங்கெல்லாம் எங்கள் உயிரினும் மேலான திராவிடர் மாடல் ஆட்சியினுடைய நாயகனை காணலாம் காணலாம் காணலாம் என்று பதிவு செய்கிறேன்.

**4 ஆயிரம் கோயில்களுக்கு மேல் குடமுழுக்கு நடத்தியுள்ளோம்!**

பேரவை தலைவர் அவர்களே

இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 123 குறிப்பிட்டுள்ளீர்கள் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரை 4641 கோயிலுக்கு குடமுழுக்கு தேர்தலுக்கு முன் நடத்தினோம் நீங்கள் நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற புள்ளி விவரத்தில் 281 கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறீர்கள் ஒட்டு மொத்தமாக பார்த்தால் 4939 கோவில்களுக்கு திராவிட மாடல் ஆட்சியாளர்கள் விதைக்கப்பட்ட விதையிலிருந்து தான்

இன்றைக்கு மரமாக வளர்ந்து குடமுழுக்கு தந்திருக்கிறது என்பதை பதிவு செய்கிறேன்.

இதிலும் ஒரு பின்னடைவு நாங்கள் ஆட்சி செய்த ஐந்தாண்டு காலத்தில் 4930 கோவில்கள் என்றால் நீங்கள் ஐந்தாண்டுகளில் மூவாயிரம் என்று அறிவித்து இருக்கிறீர்கள் இந்த 3000த்தையும் கணக்கிட்டு பார்த்தால்

திராவிட மாடல் ஆட்சியில் 1436 கோவில்களுக்கு நாங்கள் எஸ் எஸ் பி வழங்கி இருக்கின்றோம் நீங்கள் குறிப்பிட்டு இருக்கின்ற இந்த 3000 கோயில்கள் அதிலே வருகிறதா இல்லை அது இல்லாமல் தனியாக எடுக்கும் கோவில்களா.

நான் லாவணி பாட விரும்பவில்லை நீங்கள் அறிவித்த அறிவிப்பில் தெளிவாக சொல்லி இருக்கிறீர்கள் ஐந்தாண்டில் 3000 கோயில்களில் திருப்பணி செய்வோம் என்று அதை தான் சுட்டி காட்டினோம் நீங்கள் ரத்து செய்த பணிகள் எல்லாம் மக்கள் நல பணிகள் தான் அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**19,000 கோயில்களுக்கு விளக்கு ஏற்றி வைத்தவர் எங்கள் தலைவர்!**

இந்த ஆட்சியில் ஒரு ஆட்சி நிறைவுறும் போது நடைபெற்ற பணிகளுக்கு அடுத்த ஆட்சியில் நிலவி இருந்தால் அடுத்த ஆட்சியில் தருவது தான் ஒரு ஆட்சியின் திறமையான ஆட்சிக்கு அடையாளம் எங்களைப் பொறுத்தவரை என்னுடைய ஆட்சியில் திராவிட மாடல் நாயகர் மீது வைத்த நம்பிக்கையில் 2000 கோடி 3000 அளவுக்கு உபயதாரர் நிதி மாத்திரம் எங்கள் ஆட்சியின் நம்பிக்கை வைத்து அளித்த நிதி அந்த நிதி. அதேபோல் திருக்கோயிலுடைய நிதியாதாரத்தை பெருக்கியது எப்படி என்பதற்கு உதாரணம்

நிலுவையில் இருந்த 570 கோடி ரூபாயை வாடகை நிலுவை பாக்கி திருக்கோவிலுக்கு கொண்டு வந்து சேர்ந்த பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு அன்னதான திட்டத்திற்கு சுமார் 300 கோடி அளவுக்கு பொதுமக்கள் பங்களிப்பை கொண்டு வந்த சேர்த்த ஆட்சி இந்த ஆட்சி கடந்த காலங்களில் செய்யப்பட்ட பணிகளுக்கு நிலுவைத் தொகையை வழங்க வேண்டிய பொறுப்பு உங்கள் திறமையால் செய்யுங்கள் நிலுவைத் தொகையை விரைந்து அளியுங்கள்.

பெரிய பெரிய கோவில்களில் தீபங்கள் ஆயிரம் தெரியும் ஆனால் ஒரு கால பூஜை திட்டத்தில் வருகின்ற கோயில்கள் தமிழகத்தில் நிறைய உண்டு மறைந்த அம்மையார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 25 ஆயிரம் ரூபாய் வைப்பு நிதி திட்டம் தொடங்கினார்கள் பிறகு அதிமுக ஆட்சி நடைபெறும் போது அதை ஒரு லட்சமாக ரூபாயாக ஆக்கினார்கள். எங்கள் ஆட்சி வந்த பிறகு ஒரு லட்சத்தை ஒன்றரை ஆக்கினோம் பிறகு இரண்டாக்கினோம் இரண்டை இரண்டரை ஆக்கினோம் அதோடு நிற்கவில்லை 12974 திருக்கோயில்களாக இருந்த இந்த திருக்கோயில் பட்டியலை 19000 ஆக்கினோம் ஒரு வேளை நித்தியகால பூஜை கூட நடை பெறாத இருந்த கோவில்களில் ஒரு விளக்கு கூட எரிய வைக்க முடியாத இருந்த திருக்கோவில்களின் 19000 கோயில்களில் விளக்கு ஏற்றி வைத்த பெருமைக்கு சொந்தக்காரர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அந்த 19000 கோயில்களுக்கும் மின்சாரத்தை இலவசமாக வழங்கினார் அதோடு நிற்கவில்லை அந்த 19000 கோயில்களில் இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வங்கி கணக்கில் செலுத்தினார் 2025-26 ஆண்டு ஆயிரத்தை ஆயிரத்து 500 ஆக்கினார்.

இதோடு சேர்த்து அந்த திருக்கோவிலுக்கு பூஜை தட்டு, ஆரத்தி தட்டு என்று 19000 கோயிலுக்கு 9 கோடி ரூபாய் செலவில் பூஜை பொருட்கள் வழங்கிய ஆட்சி இந்த ஆட்சி

இந்த திராவிட மாடல் ஆட்சி அதோடு நிறுத்தவில்லை அந்த ஒரு கால பூஜை திட்டத்தில் இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு, கோயிலுக்கு யார் வருவார்கள் என்று ஏக்கத்தோடு இருக்கின்ற அர்ச்சகர்களுக்கு அவருடைய பிள்ளைகளுடைய படிப்பு செலவுக்கு உயர் படிப்பு படிப்பவர்களுக்கு கிட்டத்தட்ட 2000 பேர்களுக்கு 10000 என்று ஒரு கால பூஜையில் இருக்கின்ற அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவி வழங்கி கல்வி கண் திறந்தவர் எங்கள் திராவிட மாடலாட்சியினுடைய நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

**10 ஆயிரம் கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு நடத்தினோம்!**

ஒரு கால பூஜை கோயில்களையும் எடுத்துக் கொண்டோம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்களின் நிலை என்னவென்று எங்களோடு கலந்தாய்வு செய்தார் எங்கள் முதல்வர்.

அந்த ஆய்விலே அந்த திருக்கோவிலுக்கு திருப்பணிக்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தீர்கள் என்று கேட்டார்.

ஒரு லட்சம் என்றோம் ஒரு லட்சத்தில் எண்ண முடியும் திருப்பணிக்கு என்று ஒன்றை ஒன்றரை ஆக்கினார் இரண்டை இரண்டரை ஆக்கினார். எத்தனை கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தினோம் தெரியுமா? சொல்லுவார்கள் ரத்தமின்றி யுத்தம் செய்து சுதந்திரம் பெற்றது ஒரு வழி என்பார்கள் ஆரவாரம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் பெற்றது ஒருவழி என்பார்கள்

ஆரவாரம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் பத்தாயிரம் கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு தந்தவர் திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகர் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். உங்களுடைய அறிவிப்பில் கூட அறிவித்திருக்கிறீர்கள் இந்த அறிவிப்பில் கூட 106 அறிவிப்பு அறிவித்திருக்கிறீர்கள். அந்த 106 அறிவிப்புகளை எத்தனை ஆண்டுகளில் நீங்கள் நிறைவு செய்து காட்ட போகிறீர்கள் என்று பார்க்கிறோம்.

பேரவை தலைவர் அவர்களே ஆயிரமாண்டு கோயில்கள் நம்முடைய மன்னர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷம். அந்த திருக்கோயில் இந்த ஆட்சி வந்த பிறகு திருப்பணி க்காக 352 கோவில்களை வகைப்படுத்தினோம். 352 திருக்கோவிலுக்கு சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு 2022-23100 கோடி 23-24 லவ் 100 கோடி 24-25 ல் 100 கோடி 25-26 ல் 125 கோடி என்று 425 கோடியை அரசு நிதியாக தந்து 135 கோடி உபயதாரர் நிதியாகப் பெற்று

560 கோடியில் 352 கோயில்கள்

திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சுமார் 90 கோயில்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான திருக்கோவில்களுக்கு குடமுழுக்குகளை கண்டோம். ஆகையால் தான் நம்முடைய கோவி செழியன் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் இருக்கின்ற ஆபத் சகாயேஸ்வரர் கோவில் தான் யுனெஸ்கோ விருது பெற்ற திருக்கோவில் என்பதை இந்த சபையில் பதிவு செய்ய கடமைப்பட்டு இருக்கின்றேன் .

இவர்கள் சொல்வார்கள் நாங்கள் கூட திருப்பணிக்கு 217 கோவில்களுக்கு வகைப்படுத்தி இருக்கின்றோம் என்று என்னுடைய கேள்வி நாங்கள் ஏற்கனவே எடுத்துக் கொண்ட 352 கோவில்கள் இதற்குள் அடங்குகிறதா? இதை தவிர்த்து நீங்கள் 217 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு தர இருக்கிறீர்களா என்பதை தங்கள் பதில் உரை வாயிலாக அறிய விரும்புகிறேன்

பேரவை தலைவர் அவர்களே

கடல் உள்ளவரை -கார் உள்ளவரை- அருவி உள்ளவரை

ஆறு உள்ளவரை - திருக்குள நாயகன், எங்கள் தலைவர்

பெயரை எப்போதும் சொல்லும்...

**திருக்குளங்கள் மேம்பாட்டுப் பணி!**

எங்கள் திராவிட மாடல் நான்கு திருக்குளங்களை புதிதாக கட்டினோம் அதோடு நிறுத்தவில்லை 143 கோடி ரூபாய் செலவில் 272 திருக்கோவில் திருக்குளங்களை மேம்படுத்துகின்ற பணிகளை எடுத்துக் கொண்டோம். அதில் 109 திருக்குளங்கள் மேம்பாட்டு பணிகள் முடிவுற்றிருக்கின்றன. மீதமுள்ள 163 திருக்குளங்கள் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன உங்களது கொள்கை விளக்க குறிப்பிலே குறிப்பிட்ட இருக்கிறீர்கள் இந்த ஆண்டு 250 திருக்குளங்கள் சீரமைக்க போகிறோம் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். என்னுடைய கேள்வி நாங்கள் தொடங்கிய அந்த 163 திருக் கோயில்களில் நடந்து கொண்டிருக்கின்ற திருக்குளங்களை சேர்த்தா அல்லது அதை தவிர்த்து புதிதாக 250 திருக்குளங்களா?என்பதை பதில் உரையிலே நீங்கள் விளக்க வேண்டும் .

**சொத்துக்கள் மீட்பு!**

ஆலயத்தினுடைய சொத்துக்களை மீட்டெடுத்த ஆட்சி எங்களுடைய ஆட்சி.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த எண்பது ஆண்டுகளில் திருக்கோயில் சொத்துக்களை மீட்ட ஒரு ஆட்சி உண்டு என்றால் அது திராவிட மாடலா ஆட்சியாக தான் இருக்கும் 8450 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 8,147 ஏக்கர் நிலங்களை மீட்டெடுத்து இருக்கின்றோம்

பத்திரமாக சொத்துக்களை மீட்ட ஆட்சி எங்கள் ஆட்சி மீட்ட சொத்துக்களை பத்திரப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஆட்சி இந்த ஆட்சியாக இருந்து கொண்டிருக்கிறது.

**வாழும் வள்ளலார்!**

பசிப்பிணி அறியாமல் வாழ வேண்டும் என்று சொன்னவர் ,அன்பே வாழவைக்கும், ஆசை தாழ வைக்கும் என்ற குரலுக்கு ஏற்ப வள்ளலாருக்கு உலக அளவில் சர்வதேச மையத்தை தமிழக முதல்வர் எங்கள் உயிரினும் மேலான அன்பு தலைவர் கொண்டு வந்தார் .அதனுடைய பிபிடியை இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சபாநாயகர் அவருடைய உத்தரவின் அடிப்படையில் வழங்குகின்றோம்.

**வள்ளலாருக்கு சர்வதேச மையம்!**

பாருங்கள் அது எவ்வளவு அருமையாக இருக்கிறது என்று அதை நிறைவேற்ற நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் நாங்கள் வாதித்துக் கொண்டிருந்தோம், நீங்கள் ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் அந்த வழக்கிலே திரும்ப பெற்று இருக்கிறீர்கள்?எந்த வகையில் நியாயம் யார் வள்ளலார்? அவர் தமிழகத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல தன் மீது போடப்பட்ட வழக்குக்காக நீதிமன்றத்திற்கு சென்ற சென்ற அவரைப் பார்த்தவுடன் வழக்கு போட்டவர் நெடுஞ்சானாக காலில் விழுந்து வணங்குகிறார் அதைப் பார்த்த நீதிபதி அந்த வழக்கை தள்ளுபடி செய்கிறார். இப்படிப்பட்ட வள்ளலாருக்கு சர்வதேச மையத்தை நீங்கள் கொண்டு வர வேண்டும்.

நூற்றாண்டுகள் பலகண்ட தமிழ்நாட்டில் அழிக்க முடியாத பெயர்கள் ஆயிரம் இருக்கலாம்,

பகுத்தறிவு என்றாலே , தந்தை பெரியார் பெயர் இருக்கும் தமிழ்நாடு என்றாலே, அறிஞர் அண்ணா பெயர் இருக்கும், எங்கெல்லாம் தமிழுக்கு முடிசூட்டப்படுகிறதோ அங்கெல்லாம் 60 ஆண்டு கால அரசியல் சரித்திரத்தை தன் ஆட்காட்டி விரலசைவில் வைத்திருந்த முத்தமிழறிஞர் கலைஞர் பெயர் இருக்கும் .

**இந்தப் பெயர்கள் என்றும் இருக்கும்!**

பள்ளிக்கு வரும் குழந்தைகளின், காலை பசியாறும் ஒவ்வொரு அரிசியிலும் திராவிட மாடலின் நாயகர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற பெயர் இருக்கும்

இதோ, அடுத்த தலைமுறையை நோக்கி, 80 ஆண்டு இயக்கத்தின் கொள்கை முழங்கும் ஓசையில் எல்லாம், எங்கள் இளந்தலைவர் உதயநிதி என்னும் பெயர் இருக்கும்,

கடந்த திராவிட மாடல் ஆட்சியிலே அறநிலையத்துறை என்பது வரம் விளையும் துறையாகவே இருந்தது.

அன்பை வளர்ப்பதே ஆன்மீகம் என்றார் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம்.

அறத்தைப் பின்பற்றுவதே ஆன்மீகம் என்றார் மகாத்மா..

இந்த இரண்டையும் ஒருசேர நடத்திக் காட்டியவர் எங்கள் தலைவர் - திராவிட மாடல் அரசர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்...

எங்களுக்கு இந்த இடைவேளை முடிந்து!! தொடர்வேலை தொடரும்!!

இமயம் வரையில் எங்கள் அறம் படரும்!!

இவ்வாறு பி.கே.சேகர்பாபு பேசினார்.

## கழக ஆட்சியில் பயன்பெற்ற மக்களின் உள்ளங்களில் - இல்லங்களில் திராவிட மாடல் அரசின் நாயகனைக் காணலாம்!